DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Deposition of Witness

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - பிரித்திவிராஜ் | **PW-36** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | - |

(எதிரிகள் ஆஜர் இல்லை )

<u>முதல் விசாரணை:</u>-

நான் ஆ-பள்ளபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் சுயதொழில் செய்து வருகிறேன். வழக்கு சம்பவ காலத்தில் நான் பெரம்பலூரில் இருக்கும் ரோவர் பொறியியல் கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றி வந்தேன். பிரபாகாரன் மற்றம்பாஸ்கர், கிருபாகாரன் ஆகியோர்களை எனக்கு தெரியும். நானும் பாஸ்கரனும் ME பட்டப்படிப்பு சேலம் பொறியியல் கல்லூரியில் ஒன்றாக படித்தோம். நாங்கள் இருவரும் பெரம்பலூரில் உள்ள நால்ரோட்டில் தனியாக வீடு எடுத்து தங்கியிருந்தோம். என்னை பார்ப்பதற்கு பிரபாகாரன் மற்றும் கிருபாகாரன் வந்து செல்வார்கள். மேற்படி கிருபாகாரன் அரியர் வைத்திருப்பதால் டியூசன்க்காக மேற்படி பிரபாகாரன் என்னிடம் அனுப்பிவைத்தார். பின்னிட்டு TNPSC Group-2 வினாத்தாள் வெளியானது தொடர்பாக மேற்படி பிரபாகாரன் கைது செய்யப்பட்டார். என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 பாஸ்கரனுடைய laptop ஆகும். கடந்த 2012 ம் வருடம் கம்பைநல்லூர் காவல் நிலையத்தின் போலிசார் என்னை போன் மூலம் பாஸ்கரனின் laptop யை கேட்டார்கள். நான் பாஸ்கரனிடம் போன் செய்து

கேட்டேன் அவர் கொடுக்க சொல்லி சொன்னார். நான் போலிசாரிடம் laptop யை கொடுத்தேன் பிரபாகாரன் எங்கு தங்கியிருந்தார் என்பது எனக்கு தெரியாது. நான் அவர் வீட்டிற்கு செல்லவில்லை.

**<u>சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.</u>**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

போலிசார் விசாரணையின் போது விசாரணையின்போது மேற்படி கிருபாகாரன் பிரபாகாரன் கேட்டதாக சொல்லி என்னுடைய Wifi Modem மற்றும் பாஸ்கருடைய Lenovo laptop யை வாங்கி சென்றதாகவும், 2 நாட்கள் கழித்து கிருபாகரான் laptop மற்றும் Modem திரும்ப கொடுத்துவிட்டதாகவும், 12.08.2012 ம் தேதி இவ்வழக்கில் பிரபாகாரனை கைது செய்ததாக போலிசார் என்னிடம் சொன்னதாகவும் என்னுடைய laptop பயன்படுத்தியதாக சொன்னதகாவும், 03.09.2012 ம் தேதி என்னையும் பாஸ்கரனையும் அழைத்துக்கொண்டு பிரபாகாரன் வீட்டிற்கு சென்று அவரை கைது செய்யதாகவும், அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாக கூறிவிட்டு தற்போது எதிரி எனக்கு ஏற்கனவே தெரிந்தவர் என்பதார் அவரை காப்பாற்ற வேண்டும் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறுவிசாரணை இல்லை.**